

Vol.27 | No. 4 | April 2023
The Official Organ of the Diocese of Thuckalay

# இறையருள்



## இதய அஞ்சலி

**பேராயர்**

**மார் ஜோசப் பவ்வத்தில்**

14.08.1930 - 18.03.2023




MAJOR SEMINARIANS MEETING WITH THE CURIA MEMBERS, 31.03.2023



WAY OF THE CROSS, MALAICODE, 31.03.2023



MATHAR JOTHIS, WOMEN'S DAY, SOOSAIPURAM, 12.03.2023

THE OFFICIAL ORGAN OF THE DIOCESE OF THUCKALAY
VOLUME 27 No :04 APRIL 2023



# இறையருள்
# IRAIARUL

## Editorial Board

Patron

**His Excellency**

**Mar George Rajendran SDB**

Chief Editor

**Fr. Joseph Santhosh**

Associate Editors

**Fr. Thomas Sathianesan**
**Mr. Edwinson**
**Mr. Iyathurai**
**M.R.Merin Sujith**

Published by:

**Fr. Joseph Santhosh**
**Bishop's House**
**Post Box No . 12**
**Thuckalay - 629 175**
**K.K.Dist,Tamil Nadu,India.**

DTP & Design

**M.R.Merin Sujith**

Printed at

**Pulari Offset Press**
**Thuckalay**
**Ph:04651-252570**

## உள்ளே...

Bishop's Message 02
ஆயர் திருமுகம் 07
மறைக்கல்வி 12
மிஷன் லீக் இயக்கம் 14
இளையோர் இயக்கம் (SMYM) 15
இல்வாழ்வு இயக்கம் 17
வின்சென்ட் தே பவுல் சங்கம் 19
அருட்சகோதர்களிடமிருந்து 20
புலம் பெயர்ந்தோர் பணிக்குழு 21
நலவாழ்வு பணிக்குழு 22
தக்கலை இளையோர்க் கல்வி பணியகம் 23
மறைமாவட்ட செய்திகள் 24
தென்காசி மறைபரப்புதளச் செய்திகள் 27
மறைவட்ட செய்திகள் 28
MONTHLY AGENDA - APRIL 2023 33
BISHOP'S ENGAGEMENTS 35

Bishop George Rajendran SDB
Diocese of Thuckalay

Email: bpgeorgerajendran@gmail.com

BISHOP'S HOUSE
P.B. No. 12, Thuckalay P.O.
Kanyakumari District
Tamilnadu – 629175, India
Phone: +91-4651-250633
Diocese Email: thuckalaydiocese@yahoo.com

**Ref. No. Priests/GR/144/2023**

**31 March 2023**

**Dear Readers,**

Greetings and prayerful wishes from Bishop's House, Thuckalay!

In this circular I would like reflect with you HOLY WEEK, the last and the agonising days of Jesus who died for our salvation. I am sure, this will help us spiritually and also to prepare our faithful to enter into this Holy Week in a prayerful manner.

Fifty days of our Lenten campaign, which we commenced on Ash Monday, are coming to an end. We are about to enter the final week of Lent, the Holy Week. In Jesus‟ own time, these seven days were called the Passover. For us Christians, these seven days include the triumphant entry of Jesus into Jerusalem, followed by the betrayal, condemnation, and death of Jesus, climaxing on Easter Sunday with the resurrection of Jesus. These seven days have been the subject of thousands of sermons, numerous books, plays, and films. They have inspired great painters, artists, sculptors, and musicians. To fathom the cultural and historical impact of these seven days is impossible. It is also arduous to account for the scores of men and women whose lives have been transformed by the events of Holy Week.

The first day is known as Palm Sunday, which recalls Jesus‟ arrival in Jerusalem. On Palm Sunday, the faithful hold the blessed palm branches and re-enact Christ‟s entry into the eternal city of Jerusalem, accompanied by a huge crowd. People lined up the streets and waved palm branches as he rode on a donkey. They spread their cloaks too on the road to soften his path and show reverence to the “Son of David.” It was a time of great jubilation.

The Gospels narrated that Jesus rode triumphantly to Jerusalem on a donkey to the shouts of “Hosanna,” fulfilling an old prophecy that we read in Zechariah 9:9: “Rejoice greatly, O daughter of Zion; shout, O daughter of Jerusalem: behold, thy King cometh unto thee: he is just, and having salvation; lowly, and riding upon

an ass, and upon a colt the foal of an ass." The crowd was excited. The man they knew as Jesus was arriving in Jerusalem, coming to celebrate Passover, and they hoped that he would save them from the persecution and tyranny of Roman rule. In the Gospel of St Luke, we read how they shouted:

"Blessed is the king who comes in the name of the Lord. Peace in heaven and glory in the highest!" (Luke 19:38). Little did they know that what they waited for was not what they would get. God"s ways are not our ways.

On Monday, the second day, Jesus walked into the temple and found the tables of money changers and the stalls of animals. This was the great temple of Jerusalem – the place of the Ark of the Covenant, the house of God. The temple authorities had been using the Second Commandment about "no graven images" to cheat the people by making them exchange their Roman money for Jewish shekels. They made the temple a place of business and profit rather than a place of prayer. Zeal for his Father"s housemade Jesus overturns the tables and drives all the animal sellers out of the temple. On Tuesday, Jesus taught in parables, warning the people against the religious authorities who cheated them. In his preaching, Jesus has been strong against those who did not live and practise what they preach. As is given in the Gospel of John, Jesus also predicted his own death and resurrection when he said, "Destroy this temple, and I will raise it again in three days" (Jn 2:19).

Wednesday of the Holy Week is sometimes also known as "betrayal day." This is the day when Judas met the Jewish religious leaders, made a deal with them to identify Jesus the following night with a kiss, and betrayed his master for thirty pieces of silver. The thirty pieces of silver were the price for the purchase of a slave at that time. On Maundy Thursday, in the Upper Room, Jesus celebrated the Passover meal with his disciples. He gave it a new meaning for the entire Jewish celebration. The breaking of the bread is no longer a remembrance of the Exodus from Egypt. Instead, it became a reminder of his broken body and blood-shedding. The meal came to be known as "The Last Supper" or "the Eucharist." He commissioned the Apostles to keep celebrating this memorial when he said: "Do this in remembrance of me." He made a passionate prayer for unity, washed the feet of his disciples, and gave them a new commandment of love.

Soon after the last supper, Jesus and his disciples went to the Garden of Gethsemane to "watch and pray." It was while he was in the garden of Gethsemane that the Jewish officials and Roman soldiers, led by Judas Iscariot, came and arrested Jesus. Judas kissed him and addressed him as "Master." Jesus had also foretold that he would not only be betrayed but also denied by his close friends. Peter, on whom he would establish his church, denied Jesus three times before the cock crowed, just as Jesus had foretold.

Friday is known as "Good Friday." It is termed "good" to mean not so much pleasant or fun but to refer to "holy" or "pious." Deserted by his disciples, Jesus suffered malicious and false accusations and a trial in the court of Pontius Pilate. He was condemned to be crucified due to the instigation of the religious leaders. The Bible tells us that Pilate was warned by his wife, who was influenced by a dream that Jesus was innocent. The crowd, however, wanted Jesus to be crucified, and succumbing to the pressure, Pilate condemned Jesus to death. The innocent lamb suffered silently from the scourges, the sharp thorns of the crown, spittle, and violent slaps. He was made to carry his own cross to "The Place of the Skull" and was crucified. After three hours of agony on the cross, he breathed his last and was later buried in a tomb owned by Joseph of Arimathea.

Holy Saturday remembers the day when Jesus lay in the tomb. The women had hurriedly anointed his body before the burial with oils and spices, as was the Jewish custom. Evidently, they wanted to anoint it again early on Sunday morning. No one understood at that moment his words, "Destroy this temple, and I will raise it again in three days" (Jn 2:19). He was talking about himself and his resurrection.

On Easter Sunday, Jesus rose from the dead, as he had said many times earlier. The stone rolled away, and inside the tomb, only the linen, that was used to wrap his body, was left behind. The soldiers deserted the tomb, shocked and in disbelief at what they saw, and reported the events that unfolded to the authorities. Before sunrise, a group of women had come with oil to anoint the body but could not find him. The angels appeared to announce his resurrection and directed the disciples to gather in Galilee.

The resurrection of Jesus tells us that the tomb is not the end. Instead, it is the beginning. Jesus has risen, never to die again. His

mission of telling the world that evil can be conquered by good is accomplished. God, who loves the world so much, empowers human beings to overcome the evil within and around us. Human beings can be good and prove worthy of heaven. The message of the angel early on

Easter Sunday morning can be good news for us too. “Why do you seek the living among the dead? He is not here, but is risen! Remember how he spoke to you when he was still in Galilee, saying, „The Son of Man must be delivered into the hands of sinful men, and be crucified, and on the third day he will rise again‟” (Lk 24: 5-7).

The lives of the apostles underwent a radical change after Jesus rose from the dead. Jesus appeared to them and prepared them to continue his mission. The crowd, too, changed, when the apostles preached to them about Jesus and his resurrection. They were cut to the heart. “When the people heard this, they were cut to the heart and said to Peter and the other apostles, „Brothers, what shall we do?‟” (Acts 2:37). Down through the centuries, life, death, and resurrection, and the preaching of Jesus‟ principles, gave so much meaning and relevance to the people.

The celebration of Easter should encourage us to begin our lives anew. We need to live our lives afresh, positively and re-energised in order to do good and avoid evil, to contribute towards the progress and not stagnation or regression. Let us not look for the dead among the living. Let us look for life and promote life. Let us stop being dead while being alive. Let us be fully alive.

One of the often repeated gifts of the risen Lord was peace. He would say: “Peace be with you.” Peace is the need of the hour for individuals and for the entire world. We need to work for peace and promote peace. A peaceful man is serene and will not cause trouble for others. We are expected to be people who are symbols of peace, serenity, and joy.

Jesus forgave Peter. “I have prayed for you, Simon,” said Jesus, “that your faith may not fail. And when you have turned back, strengthen your brothers.” In return, Jesus received loyalty, deep commitment, and love from Peter. “Yes, Lord, you know I love you” was what Peter replied to Jesus after his resurrection. He then entrusted him with the responsibility of looking after and tending his sheep. He condescended to show his wounded side and allow it to be touched by Thomas just to strengthen his

faith. Finally, he not only commissioned every disciple to go and preach repentance, love, and forgiveness to all creation but also promised to be with everyone who called on him till the end of time.

I wish every one of you a very happy celebration of Easter. May the risen Lord fill you with his peace, love, and passion! Let us pray for one another. Let us earnestly ask the risen Lord for the grace that we will all be faithful to the mission that he gave to us. I pray for greater fidelity and enthusiasm in our priestly ministries. Let us also ask the risen Lord to bless all the faithful in our Eparchy so that they may be beheld under his loving care. On 16 April 2023, the Sunday after Easter, we will celebrate Divine Mercy Sunday. It is originally based

on the devotion to the Divine Mercy that St Faustina Kowalska reported as part of the vision that she had of Jesus. It is associated with special promises from Jesus and indulgences that the Church has issued. It also focuses on the gift of mercy and love given through Christ‟s death, burial, and resurrection. St John Paul II reminds us: “Divine Mercy reaches human beings through the heart of Christ crucified.” I invite you, dear Fathers, to make this day special for our people. Kindly organize special devotional practices on this day and propagate devotional practices to Divine Mercy, like the recitation of the chaplet of Divine Mercy, among the faithful. Let us ask the risen Lord to bless all our ventures in the extended territories of our eparchy and to make us missionary-minded in all the ministries that we carry out.

With my prayers and blessings,
Yours in Christ Jesus,

BISHOP GEORGE RAJENDRAN sdb
Diocese of Thuckalay

† George Rajendran SDB
Bishop of Thuckalay

Bishop George Rajendran sdb
Diocese of Thuckalay
ஆயர் சுற்றுமடல்
Bishop's House, P B No: 12,Thuckalay PO, Kanya kumari Dt- 629 175, Tamil Nadu, India

## Pastoral Letter No/GR/49/2023

### ஆயர் சுற்றுமடல்

***ஈசோ மெசியாவில் அன்பிற்குரிய அருட்தந்தையரே! அருட்சகோதரிகளே! அன்பு இறைமக்களே! நம் தந்தையாம் கடவுளிடமிருந்தும், ஆண்டவராம் ஈசோ மெசியாவிடமிருந்தும் அமைதியும் அருளும் உரித்தாகுக!***

2023 பிப்ரவரி 20-ஆம் தேதி திங்கள்கிழமை நாம் நெற்றியில் சாம்பல் பூசி தவக்காலத்தைத் தொடங்கினோம். தவக்காலம் முடிவடைய இனி சில நாட்களே எஞ்சியுள்ளன. இவ்வேளையில், தவக்காலத்தின் நோக்கங்களான மனம்வருந்துதல், மனமாற்றம், ஒப்புரவு, வாழ்வைப் புதுப்பித்தல் போன்றவற்றிற்கு முக்கியத்துவம் கொடுத்தோமா? எனக் கேள்வி எழுப்புவது சிறந்தது. இனி உள்ள நாட்களை அர்த்தமிக்கதாக செலவிட்டு ஆன்மப் புத்துணர்ச்சி அடைவோம்.

கிறிஸ்தவ வாழ்வின் மையமாக பாஸ்கா நிகழ்வு விளங்குகிறது. இவ்விழாவை தகுந்தத் தயாரிப்புடன் கொண்டாடும் நோக்கத்தில்தான் நாம் ஐம்பது நாட்கள் தவம் மேற்கொள்கிறோம். நம் ஆண்டவர் ஈசோ மெசியாவின் சிலுவைப்பாடுகள், இறப்பு, அடக்கம், உயிர்ப்பு ஆகியவற்றை உள்ளடக்கியதே பாஸ்கா நிகழ்வு. இதுவே திருவழிபாட்டு ஆண்டின் மிகவும் முக்கியமானக் கொண்டாட்டம். பாவத்தில் விழுந்த மனிதரை மீட்பதற்காகக் கடவுள் வகுத்தத் திட்டத்தின் பகுதியாக பாஸ்கா விளங்குகிறது. இதன் வழியாகவே கடவுள் மனிதருக்கு மீட்பை ஏற்படுத்தினார்.

சாத்தானின் சோதனைக்கு உட்பட்டு மனிதர்கள் பாவத்திற்கு அடிமையாயினர். அதன் வழியாக சாவும் மனிதரைக் கவ்விக்கொண்டது. பாவம் மற்றும் சாவின் பிடியிலிருந்து மனிதரை விடுவிக்க தந்தைக் கடவுள் தமது ஒரே மகனை உலகிற்கு அனுப்பினார். மகனாகிய மெசியா தமது பாடுகள் மற்றும் சிலுவைப்பலி வழியாக பாவத்திற்குக் கழுவாயாக மாறி, உயிர்த்தெழுதல் வழியாக மனிதருக்கு நிலைவாழ்வை அளித்தார்.

இவ்வாறாக, மனிதர்கள் சாத்தானின் அடிமைத்தளையிலிருந்து விடுவிக்கப்பட்டு, கடவுளோடு ஒப்புரவாயினர். இதுவே பாஸ்கா மறைபொருள் என அழைக்கப்படும் மீட்பின் திட்டம்.

ஏப்ரல் 2 ஆம் தேதி, ஓசானா ஞாயிறு கொண்டாட்டங்களுடன் நாம் புனித வாரத்திற்குள் நுழைவோம். பெரிய வியாழன், புனித வெள்ளி, சனி மற்றும் உயிர்ப்பு ஞாயிறு ஆகிய தினங்கள் புனித வாரத்தின் முக்கிய நாட்களாக அமைகின்றன. அன்று, மக்களின் ஆரவார ஒலிகளுக்கு நடுவே, ஆண்டவர் ஈசோ எருசலேம் நகருக்குள் நுழைந்தார். இன்றோ, நாம் இசைக்கும் ஓசானாப் பாடல்களை அவர் ஏற்று நமக்கு அருள்புரிவார். பெசகா வியாழன் அன்று ஈசோ சீடரிடம் "நான் உங்களிடம் அன்பு செலுத்தியது போல நீங்களும் ஒருவர் மற்றவரிடம் அன்பு செலுத்துங்கள்' (யோவா 13.34) என்ற அதே அன்பின் கட்டளையை அவர் இன்றும் நமக்கு அளிப்பார். அதுபோல, புனித வெள்ளியன்று, "தந்தையே, இவர்களை மன்னியும். ஏனெனில், தாங்கள் செய்வது என்னவென்று இவர்களுக்குத் தெரியவில்லை' (லூக் 23.34) என்று இயேசு சிலுவையில் தொங்கியவாறு சொல்லிய செபத்தை நாம் இன்றும் கேட்போம். நம்முடைய வெளிக் கண்களுக்கு மறைவாக இருந்தாலும், நம்முடைய அகக்கண்களால் அவரது மாட்சிமிகு உயிர்த்தெழுதலைக் காண்போம். உயிர்த்தெழுந்த ஈசோவின் ஒளி நம்முடைய இதயங்களில் மண்டிக்கிடக்கும் இருளை அகற்றும்.

அன்பான இறைமக்களே, பாவத்தின் வழிகளை விட்டுவிட்டு, கடவுள் நமக்கென காட்டித் தரும் வழியில் பயணிப்போம். அதற்காக இனிவரும் நாட்களை பயன்படுத்திக் கொள்வோம். உயிர்த்தெழுந்த ஈசோவின் அமைதியால் நாம் நமது இதயங்களை நிரப்புவோம். இறைவார்த்தைக்கு செவிமடுத்து, திவ்யநற்கருணை ஆண்டவரை உட்கொண்டு, இதயங்களை நம்பிக்கை, எதிர்நோக்கு, அன்பு ஆகிய புண்ணியங்களால் நிரப்புவோம். சாவை சாவால் வென்று ஈசோ உயித்தெழுந்து மனிதருக்கு மீட்பை அளித்தார். ஈசோவின் உயிர்த்தெழுதல் மக்களுக்கு மீட்பளிக்கும் மாபெரும் நற்செய்தியாக மாறியது. நாம் மேற்கொள்ளும் அனைத்துவிதமானத் திருத்தொண்டுப் பணிகளுக்கும் ஆற்றலின் ஊற்றாக ஈசோவின் உயிர்த்தெழுதல் விளங்குகிறது. புனித பவுல் பின்வருமாறு கூறுகிறார்; "கிறிஸ்து உயிருடன் எழுப்பப்படவில்லை என்றால் நாங்கள் பறைசாற்றிய நற்செய்தியும் நீங்கள் கொண்டிருக்கிற நம்பிக்கையும் பொருளற்றதாயிருக்கும்' (1 கொரி 15.14).

உயிர்த்தெழுந்த ஆண்டவர் மீது நம்பிக்கை வைத்து, உறுதியுடனும் ஆர்வத்துடனும் திருத்தொண்டுப்பணிகளில் ஈடுபடுவோம். 2017-ஆம் ஆண்டு திருத்தந்தை பிரான்சிஸ் தக்கலை மறைமாவட்டத்தின்

எல்லையை தென்காசி, தூத்துக்குடி, விருதுநகர், திருநெல்வேலி, மதுரை, இராமநாதபுரம், சிவகங்கை, தேனி என தமிழ்நாட்டின் மேலும் 8 மாவட்டங்களுக்கு விரிவுப்படுத்தினார். அன்று முதல், புதிய இடங்களில் திருத்தொண்டுப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. நம்முடைய அருட்தந்தையரும் அருட்சகோதரிகளும் அடிப்படை வசதிகள் கூட இல்லாத இடங்களுக்குச் சென்று வாடகை வீடுகளில் தங்கி திருத்தொண்டுப் பணியை மேற்கொள்ள ஆரம்பித்தனர். கிராமங்களை சந்தித்தல், இறைமக்கள் சமூகத்தை உருவாக்குதல், ஆதரவற்றவர்களுக்கு உதவுதல், மாலைநேர வகுப்புகள் நடத்துதல், குழந்தைகளுக்கு நன்னெறிப் பயிற்றுவித்தல் போன்ற திருத்தொண்டுப் பணிகளை ஆர்வமுடன் முன்னெடுக்கின்றனர். நமது செபம் மற்றும் இதர உதவிகளின் மூலம் அவர்களுக்கு பக்கப்பலமாய் இருந்து திருத்தொண்டு பணிகளில் நாமும் பங்காளிகளாக மாறுவேம். இது நம்முடைய கடமை என்பதை உணர்ந்து செயல்படுவோம். திருத்தொண்டு பணியிடங்களில் அவர்கள் பலவிதமானச் சவால்களை எதிர்கொள்கிறார்கள். அவர்களுக்கு உதவும் நோக்கத்தில்தான் இந்த ஆண்டு தவக்கால உண்டியல் நமக்குத் தரப்பட்டன. அதில் நீங்கள் மனமுவந்து காணிக்கை அளிப்பதன் வழியாக திருத்தொண்டுப் பணியில் நீங்களும் பங்கேற்கலாம். அவ்வாறாக நற்செய்திப் பணியாளர்களாக நீங்களும் மாறலாம். இம்முயற்சியில் பங்குகளில் செயல்படும் சிறுமலர் இயக்கத்தைச் சேர்ந்தக் குழந்தைகளையும் இணைத்துக் கொள்ள உங்களை அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

உங்களுக்;காகவும் உங்கள் குடும்பங்களுக்காகவும் நான் இறைவனை வேண்டுகிறேன். எனக்காகவும் நம்முடைய மறைமாவட்ட வளர்ச்சிக்காகவும் குறிப்பாக திருத்தொண்டு பணிகளுக்காகவும் தொடர்ந்து செபிக்க உங்களை அன்புடன் கேட்டுக் கொள்கிறேன். உயிர்த்தெழுந்த ஈசோ மெசியாவின் ஆற்றலும் ஒளியும் உங்கள் குடும்பங்களில் தங்கி இருப்பதாக. அனைவருக்கும் உயிர்ப்புத் திருநாள் நல் வாழ்த்துகளைத் தெரிவிப்பதோடு, இறையாசியும் அளிக்கிறேன்.

**ஆயர் இல்லம்**
**22.03.2023**

**என்றும் ஈசோ மெசியாவில்**

**மார் ஜார்ஜ் இராஜேந்திரன் SDB**
**தக்கலை மறைமாவட்ட ஆயர்**

## Church Collections - Mission Sunday 2022

| Sl.No | Place & Church Name | Amount |
|---|---|---|
| | **Arukani Forane** | |
| 1 | Arukani Holy Family Forane Church | 9921 |
| 2 | Anamukham Loreto Matha Church | 1560 |
| 3 | Mezhacode St. Francis Assisi Church | 4500 |
| 4 | Pathukani St. Thomas Church | 2900 |
| 5 | Penu St. Mary's Church | 1500 |
| 6 | Chempagatharisu Mission | 1300 |
| | **Manjalumoodu Forane** | |
| 7 | Bengiri St. Benedict's Church | 3000 |
| 8 | Kuttaicode St. Chavara kuriacose Church | 3420 |
| 9 | Malaicode Holy Cross Church | 15000 |
| 10 | Manjalumoodu Little Flower Forane Church | 30100 |
| 11 | Mukkoottukal, Holy Family Church | 9530 |
| | **Kaliyal Forane** | |
| 12 | Chenamcode Lourdu Matha Church | 2000 |
| 13 | Kulasekharam St. John Paul II Misson | 1000 |
| 14 | Kaliyal St. Mary's Church | 6000 |
| 15 | Karode St. Joseph's Church | 3000 |
| 16 | Marapady St. Thomas Church | 3000 |
| | **Nithiravilai Forane** | |
| 17 | Cheenivilai Amala Maria Church | 2000 |
| 18 | Munchirai St. George Church | 7200 |
| 19 | Nithiravilai Jayamatha Forane Church | 10000 |
| 20 | Varuthattu St. Xavier's Church | 3750 |
| | **Padanthalumoodu Forane** | |
| 21 | Annikkarai St. Mathew's Church | 5300 |
| 22 | Athencode St. Maria Goretti Church | 4675 |
| 23 | Kazhuvanthittai St. Martin de Porres Church | 6635 |
| 24 | Kuzhithurai (Kallukatti) St. Philip's Church | 1400 |

| | | |
|---|---|---|
| 25 | Marthandam St. Vincent de Paul Church | 1200 |
| 26 | Padanthalumoodu Sacred Heart Forane Church | 11230 |
| 27 | Thettiyode St. Paul's Church | 5240 |
| 28 | Valan Nagar (Kunnuvilai) St. Joseph Church | 2180 |
| **Soosaipuram Forane** | | |
| 29 | Kudukachivilai (Fathimapuram) Fathima Matha Church | 2960 |
| 30 | Killiyoor Devamatha Church | 3000 |
| 31 | Mathapuram St. Thomas Church | 1000 |
| 32 | Palapallam Christ the King Church | 17780 |
| 33 | Pilankarai Loreto Matha Church | 3500 |
| 34 | Thakkalivilai Holy Family Church | 1250 |
| **Thuckalay-Pilankalai Forane** | | |
| 35 | Mekkamandapam (Kaisalavilai) St. Xavier's Church | 1650 |
| 36 | Nagercoil St. Alphonsa Church | 50015 |
| 37 | Paraicode Christ the king Church | 1500 |
| 38 | Pilankalai Little Flower Forane Church | 5100 |
| 39 | Thadikarankonam St. Joseph Church | 3670 |
| 39 | Thuckalay St. Mary's Church | 1000 |
| 40 | Vattaikottai Arokiya Annai Mission | 600 |
| 41 | Chitenkudiuiruppu John Paul II Mission | 1300 |
| **Tenkasi Mission** | | |
| 42 | Mekkarai St. George Church | 4000 |
| 43 | Puliyarai Little Flower Church | 3000 |
| 44 | Tenkasi Railway Gate Amala Maria Church | 6000 |
| 45 | Vanchi Nagar St. Mary's Church | 1320 |
| **Missions in Extended Territory** | | |
| 46 | Virudhunagar | 500 |

**Total Amount - Rs 267686**

Fr. Johnsilal, Financel officer




"உலகெங்கும் சென்று படைப்பிற்கெல்லாம் நற்செய்தியைப் பறைசாற்றுங்கள்."
(மாற் 16:15)

***"அறிவிப்பதை கேட்டால் தான் நம்பிக்கை உண்டாகும். கிறிஸ்துவைப் பற்றிய செய்தி அறிவிக்கப்பட்டால் தான் அதைக் கேட்க வாய்ப்புண்டு." [உரோமையர் 10:17]***

அனைவருக்கும் அன்பின் நல்வாழ்த்துகள்!

## *தலைமையாசிரியர்களின் கூட்டம் மற்றும் ஆசிரியர்களுக்கான அடிப்படை பயிற்சி வகுப்பிற்கான சான்றிதழ் வழங்கும் விழா*

மறைக்கல்வியின் தலைமையாசிரியர்களின் கூட்டம் மற்றும் ஆசிரியர்களுக்கான அடிப்படை பயிற்சி வகுப்பு முடித்தவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் விழா 2023 மார்ச் 25, சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு கல்லுவிளை KKSSS அலுவலக அரங்கில் வைத்து ஆயர். மார். ஜார்ஜ் இராஜேந்திரன் அவர்கள் தலைமையிலும் குருகுல முதல்வர் பேரருட்தந்தை தோமஸ் பவ்வத்துபறம்பில் மற்றும் இயக்குநர் அருட்தந்தை அபிலாஷ் அவர்கள் முன்னிலையிலும் நடைபெற்றது. நிகழ்வின் தொடக்கமாக துய ஆவியார் பாடல் அனைவராலும் சேர்ந்து பாடப்பட்டது. தொடர்ந்து மாங்கரை மறைக்கல்வி தலைமையாசிரியை அருட்சகோதரி விமலா SABS அவர்கள் விவிலியம் வாசித்து செபம் செய்தார். இயக்குநர் அருட்தந்தை அபிலாஷ் சேவியர் அவர்கள் வரவேற்புரைக் கூறினார். குருகுல முதல்வர் பேரருட்தந்தை தோமஸ் பவ்வத்துபறம்பில் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார். வாழ்த்துரையின் போது கிறிஸ்து இயேசுவில் மாணவரை உருவாக்கும் பணியே மறைக்கல்விப்பணி. அப்படிப்பட்ட உன்னதமான பணி வழியாக மாணவர்களை நம்பிக்கை வாழ்வில் உருவாக்கும் முயற்சியில் ஈடுபட வேண்டும் என்றுக் கேட்டுக் கொண்டார். ஆயர் தமது கலந்துரையடலின் போது, பயிற்சியாளர்களாக இருக்கும் தலைமையாசிரியர்களும் ஆசிரியர்களும் கொண்டிருக்கும் ஈடுபாடுப் பற்றிக் கேட்டிறிந்தார். அவர்கள் எதிர்கொள்ளும் தடைகள், சவால்கள் போன்றவற்றையும் குறித்துக் கேட்டுத் தெரிந்துக் கொண்டார்.



கலந்துரையாடலிலிருந்துப் பெற்றுக் கொண்ட கருத்துக்கள் குருக்களின் கூட்டத்தில் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும் என்றார். நிகழ்வின் தொடர்ச்சியாக அடிப்படை பயிற்சி வகுப்பு முடித்த ஆசிரியர்களுக்கு ஆயர் மற்றும் குருகுல முதல்வர் ஆகியோர் சான்றிதழ் வழங்கி கௌரவித்தனர். இயக்குநர் அருட்தந்தை அபிலாஷ் சேவியர் அவர்கள் ஏப்ரல், மே மாதங்களில் நடைபெறவிருக்கும் விசுவாச பயிற்சி விழா, திறனாய்வுத்தேர்வு, 10, 11, 12 ஆம் வகுப்பு தேர்வு, ஆசிரியர்களுக்கான அடிப்படை பயிற்சி வகுப்பு, ஆகிய நிகழ்வுகளைப்பற்றி எடுத்துக்கூறினார். மேலும் மறைமாவட்ட அளவில் நடைபெற்ற விவிலிய வினாடிவினாப்போட்டியில் பரிசு பெற்றவர்களின் பெயர் விபரம் வாசிக்கப்பட்டது. இக்கூட்டத்தின் போது வகுப்பு ½ முதல் வகுப்ப 9 வரையுள்ள மாணவர்களுக்கான 2 ஆம் பருவத்தேர்வுக்கான வினாத்தாள் அனைத்து மறைக்கல்வி நிலையங்களுக்கும் வழங்கப்பட்டது. தொடர்ந்து தலைமையாசிரியர் திரு விஸ்வநாதன் அவர்கள் கலந்துகொண்ட அனைவருக்கும் நன்றி கூறினார். தலைமையாசிரியர்களும் அடிப்படை பயிற்சி வகுப்பு முடித்த ஆசிரியர்களும் கலந்துக்கொண்டு இக்கூட்டத்தைச் சிறப்பித்தனர். பின்னர் தேனீர் விருந்துடன் கூட்டமானது 12.30 மணியளவில் முடிவுற்றது.

### இரண்டாம் பருவத்தேர்வு

2022-23 ஆம் மறைக்கல்வி ஆண்டின் ½ வகுப்பு முதல் 9 வரையுள்ள மாணவர்களுக்கான 2 ஆம் பருவத்தேர்வு மார்ச் 26 ஞாயிற்றுக்கிழமை அன்று அனைத்து மறைக்கல்வி நிலையங்களிலும் நடைபெற்றது.

### ஆசிரியர்களுக்கான அடிப்படை பயிற்சி வகுப்புகள்

ஆசிரியர்களில் ஒரு பகுதியினர் அடிப்படை இறையியல் பயிற்சியை (BTCT) வெற்றிகரமாக முடிந்தனர். 2 ஆம் பகுதி ஆசிரியர்களுக்கான அடிப்படை பயிற்சி வகுப்புகள் பிப்ரவரி 26 ஞாயிற்றுக்கிழமை முதல் ஆரம்பமாகி மார்ச் 5, 12,19, மற்றும் 26 ஆகிய நாட்களில் படந்தாலுமுடு திருஇருதய ஆலய அரங்கில் வைத்து நடைபெற்றது. காலை 8.40 மணிக்கு காலை செபம் மற்றும் திருப்பலியைத் தொடர்ந்து வகுப்புகள் 10.30 முதல் மாலை 4.00 மணி வரை நடைபெற்று வருகிகிறது.

**அருட்தந்தை. ஜேக்கப் ஐயம்மாத்ற**
**இணை இயக்குநர்**

**அருட்தந்தை.அபிலாஷ் சேவியர்**
**இயக்குநர்**

# மிஷன் லீக் இயக்கம்

சிறுமலர் MISSION LEAGUE

சிறுமலர் மிஷன்லீக் இயக்கத்தின் தேசிய நிர்வாக குழு கூட்டம் மற்றும் நிர்வாக குழுத் தேர்வு மார்ச் 18 ஆம் தேதி கர்நாடக மாநிலம் பெல்தங்காடி ஆயர் மையத்தில் வைத்து (Jnananilaya Pastoral Centre) நடைபெற்றது. காலை 9 மணி அளவில் மிஷன்லீக் கொடியேற்றி 9.15 மணிக்கு திருப்பலி நடைபெற்றது. 10:30 மணிக்கு தேசிய நிர்வாக குழு கூட்டம் நடைபெற்றது. மறை மாவட்ட ஆயர் மார் லாரன்ஸ் முக்குழி அவர்கள் முன்னிலையில் தேசியத் தலைவர் பினோய் பள்ளிப்பறம்பில் அவர்கள் தலைமையுரையாற்றினார்கள். அருட்தந்தை ஜோசப் மட்டத்தில் அவர்கள் அனைவரையும் வரவேற்றார். செயலர் சுஜி புல்லுக்காட் அவர்கள் கடந்தாண்டு அறிக்கையை வாசித்தார். பல உறுப்பினர்கள் தங்கள் அனுபவங்களை பகிர்ந்து கொண்டனர். இந்த இயக்கம் தேசிய அளவில் மட்டுமல்ல, அகில உலக அளவிலும் வளர்ந்து வரும் ஒரு இயக்கமாக உள்ளது என்றார்கள். மேலும் ஆயர் அவர்கள் பேசும்போது, இது ஒரு மிகப்பெரிய இயக்கம். சீரோ மலபார் ஆயர் பேரவையின் ஒப்புதலைப் பெற்ற இவ்இயக்கம் வளர்ந்து வருகிறது. புனிதர்கள் ஒன்று கூடும்போது தூய ஆவியார் செயல் படுவார். அதுபோல மிஷன்லீக் இயக்கம் கூடும்போது தூய ஆவியார் செயலாற்றுகிறார். வாள்களோடும் தடிகளோடும் அல்ல மாறாக கிறிஸ்துவின் அன்பினாலும் சேவையினாலும் மாற்றம் ஒன்று ஏற்பட மிஷன் லீக் இயக்கம் ஒரு உந்து சக்தியாக செயல்பட வேண்டும் என்று வாழ்த்தினார். பின்பு தேதல் நடை பெ ற்றது. அதில் தேசிய துணை இயக்குனராக அருட்தந்தை பிரிண்டோ குரியாஸ் அவர்களும் துணை தலைவராக திருமதி லதா குமாரி அவர்களும் தணிக்கையாளராக திரு. மகேஷ் அவர்களும் ஒருங்கிணைப்பாளராக திரு. ஞானதாஸ் அவர்களும் நமது மறைமாவட்ட அளவில் தேர்வு செய்யப்பட்டனர்




***அருட்தந்தை பிரிண்டோ குரியாஸ்***
***இயக்குநர்***

சீரோ மலபார் இளையோர் இயக்கம் SMYM

### ***ஆன்மீக புத்துணர்வு நிகழ்வு***

தக்கலை மறைமாவட்ட சீரோ மலபார் இளையோர் இயக்கத்தின் ஆன்மீக புத்துண்ரவு நிகழ்வு, தமிழ்நாடு ஜீஸஸ் யூத் குழுவினரால் நடத்தப்பட்டது. இந்நிகழ்வை தக்கலை சான்ஜோ மாகாண FCC அருட்சகோதரிகள் ஏற்பாடு செய்தார்கள். 2023 மார்ச் 4 சனிக்கிழமை காட்டத்துறை புனித மிக்கேல் அதிதூதர் ஆலய வளாகத்தில் வைத்து இது நடைபெற்றது. காலை 9.30 மணியளவில் தொடங்கிய இந்நிகழ்வில் பரைக்கோடு ஆலய இளையோர்கள் இறைவணக்கம் பாடினர். தெற்றியோடு ஆலயத்தை சார்ந்த ஜாஸ்மின் அனைவரையும் வரவேற்றார். சிறப்பு விருந்தினர்கள் குத்துவிளக்கேற்றி நிகழ்வுகளை தொடங்கி வைத்தனர். தொடர்ந்து அருட்சகோதரி அமலா FCC அவர்கள் நிகழ்ச்சிக்கான நோக்கம் குறித்து விளக்கி கூறினார். SMYM மறைமாவட்ட இயக்குநர் அருட்தந்தை ஜோசப் சந்தோஷ் அவர்கள் தொடக்க உரை வழங்கினார்கள். சிறப்பு விருந்தினர்களாக அருட்தந்தை அபிலாஷ் சேவியர் மற்றும் அருட்சகோதரி வினிதா FCC கலந்து கொண்டனர். தொடர்ந்து ஜீசஸ் யூத் தமிழ்நாடு மண்டல இளையோர்கள் நிகழ்வுகளை வழிநடத்தினர். அருட்தந்தை ஜோசப் சந்தோஷ் திருப்பலி நிறைவேற்றினார். இறுதியில் காட்டாத்துறை பங்கை சார்ந்த ஆஷிக் அனைவருக்கும் நன்றி கூறினார். மாலை 3:30 மணி அளவில் நிகழ்வுகள் அனைத்தும் நிறைவு பெற்றது இந்நிகழ்வில் மறைமாவட்டத்தை சார்ந்த சுமார் 70 இளையோர்கள் கலந்து கொண்டனர்.

### ***தொடர் உருவாக்கல் பயிற்சி வகுப்புகள்***

தக்கலை மறைமாவட்ட சீரோ மலபார் இளையோர் இயக்கத்தின் நடுவண் செயற்குழு மற்றும் தலைமைத்துவ பயிற்சியில் தேர்ந்தெடுக்கப்பட்ட தன்னார்வலர்களுக்கான பயிற்சி 2023 மார்ச் 14 செவ்வாய்க்கிழமை, காலை 10 மணியளவில் கல்லுவிளை SMYM அலுவலகத்தில் வைத்து நடைபெற்றது. தூய ஆவியார் பாடலுடன் நிகழ்வுகள் ஆரம்பானது. மறைமாவட்ட SMYM துணைத்தலைவர் அஞ்சனா வரவேற்று பேசினார். திருச்சி டோன் போஸ்கோ வழிகாட்டி ஒருங்கிணைப்பாளர் திரு மைக்கேல் ராஜா அவர்கள் இந்நிகழ்வை வழிநடத்தினார்.



இதில் வாழ்க்கை வழிகாட்டி வகுப்பிற்கான பயிற்சி மற்றும் அதற்கான தரவுகள் பகிர்ந்தளிக்கப்பட்டன. மதியம் 2 மணியளவில் SMYM மறைமாவட்ட இயக்குநர் அருட்தந்தை ஜோசப் சந்தோஷ் அவர்கள் இளையோர் மறைக்கல்வி குறித்து வகுப்புகள் நடத்தினார். இறுதியில் தக்கலை மறைமாவட்ட SMYM செயலர் மெரின் சுஜித் அனைவருக்கும் நன்றி கூறினார். பயிற்சி வகுப்பில் மறைமாவட்டத்தை சார்ந்த 10 இளையோர்கள் கலந்து கொண்டனர்.

### *அலகு சந்திப்பு*

தக்கலை மறைமாவட்ட சீரோ மலபார் இளையோர் இயக்கத்தின் செயற்குழு உறுப்பினர்கள் தற்போது பங்குகளவில் இயங்கும் அலகுகளைப் பார்வையிட்டு வருகின்றனர். ஞாயிற்றுகிழமைகளில் அந்தந்த பங்குகளில் திருப்பலியில் பங்கேற்று அலகு சந்திப்பு நடைபெற்று வருகிறது. 05.03.2023 அன்று மாதாபுரம் மற்றும் பாத்திமாநகர் ஆலயத்திலும், 12.03.2023 அன்று தக்காளிவிளை மற்றும் கிள்ளியூர் ஆலயத்திலும் 19.03.2023 அன்று பாலப்பள்ளம் மற்றும் பரைக்கோடு ஆலயத்திலும் நடைபெற்றது.



### *Jesus Dreamz இசைக்குழு*



சீரோ மலபார் இளையோர் இயக்கத்தின் கீழ் செயல்படும் Jesus Dreamz இசைக்குழுவினரின் தலைமையில் Taize Prayer நடைபெற்று வருகிறது. 2023 மார்ச் 11 சனிக்கிழமை மாதாபுரம் ஆலயத்திலும், மார்ச் 12 ஞாயிற்றுக்கிழமை கிறிஸ்துராஜபுரம் ஆலயத்திலும், மார்ச் 19 ஞாயிற்றுக்கிழமை வயலங்கரை ஆலயத்திலும், மார்ச் 25 சனிக்கிழமை பாலப்பள்ளம் ஆலயத்திலும் நடைபெற்றது.

**இவண்**
**மெரின் சுஜித், செயலர்**




***"'குடும்பம் வாழ்வின் அடித்தளம்' இக்குடும்பம் குழந்தைகளின் வளர்ச்சிக்கும், அறிவுத் திறனுக்கும், சாதகமான சூழலை உருவாக்கும் திறன் கொண்டது. இச்சாதகமான சூழலை பெற்றோரால் தான் குழந்தைகளுக்கு கொடுக்க முடியும்" [திருத்தந்தை பிரான்சிஸ்]***

## இல்வாழ்வு இயக்கம்

குடும்பம் உயர்களின் பிறப்பிடம், உறவுகளின் ஊற்று. இன்பத்திலும், துன்பத்திலும், உடல் நலத்திலும், நோயிலும் நான் உனக்கு பிரமாணிக்கமாய் இருப்பேன் என்ற திருமண வாக்குறுதியுடன் தொடங்கப்பட்ட குடும்பம் ஒவ்வொன்றும் திருக்குடும்பமாக வாழ அழைக்கப்படுகின்றது. நமது குடும்பங்களையும் திருக்குடும்பமாக மாற்ற இல்வாழ்வு இயக்கும் குடும்பங்களுக்கு ஓர் வழிகாட்டியாக செயல்பட்டு வருகிறது. குடும்பங்களில் ஏற்படும் பிரச்சனைகளுக்கு தீர்வு காண இல்வாழ்வு இயக்க அலுவலகத்தில் ஆற்றுப்படுத்துதல் திங்கள் முதல் வியாழன் வரை அருட்தந்தை மற்றும் அருட்கன்னியர்களால் நடத்தப்பட்டு வருகிறது. குடும்பங்களில் காணப்படும் மது நோய் மற்றும் மனநோய்க்கான மருந்துகளும் வழங்கப்பட்டு வருகிறது.

## மகளிர் தின கொண்டாட்டம்

மாதர் ஜோதிஸ் தாய்மார்களுக்கான மகளிர் தினக் கொண்டாட்டம் சூசைபுரம், புனித சூசையப்பர் மறைவட்ட ஆலய வளாகத்தில் 12-3-2023 ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. சுமார் 1.30 மணியளவில் போதை எதிர்ப்பு பேரணி நடைபெற்றது. மறைவட்டத்தைச் சார்ந்த தாய்மார்கள் விழிப்புணர்வு நடனம் மற்றும் நாடகம் இடம் பெற்றன. Adv. அன்துஷ் ஜெரோம் (மாவட்ட சட்ட உதவி ஒருங்கிணைப்பாளர்) மற்றும் Er. பெபின் ரமேஷ் (JCI தலைவர் களியக்காவிளை) அவர்கள் வருகைத் தந்து தாய்மார்களுக்கு மகிழ்ச்சியான குழந்தை வளர்ப்பு பற்றிய வகுப்புகள் நடத்தினர். இக்கூட்டத்தில் சுமார் 160 தாய்மார்கள் கலந்து கொண்டனர். இந்நிகழ்வுகள் சுமார் 4 மணியளவில் நிறைவுற்றது.



***திருமண ஆயத்தப் பயிற்சி***

திருமண ஆயத்தப் பயிற்சி வகுப்பானது மார்ச் 10, 11 ம் தேதியும் மார்ச் 31, ஏப்ரல் 1 ம் தேதிகளிலும் இல்வாழ்வு இயக்கம் கல்லுவிளையில் வைத்து நடைபெற்றது. இப்பயிற்சியில் ஏப்ரல் 1 ம் தேதி மேதகு ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் அவர்கள் வருகைப்புரிந்து இளையோர்க்கு அறிவுரை வழங்கினார். பின்னர் பயிற்சி வகுப்பின் சான்றிதழ்களையும் இளையோருக்கு வழங்கினார். இப்பயிற்சி வகுப்புகளில் 37 நபர்கள் கலந்து கொண்டனர். மே 12 மற்றும் 13 தேதிகளில் திருமண ஆயத்தப் பயிற்சி வகுப்பு கல்லுவிளை இல்வாழ்வு இயக்க அலுவலகத்தில் வைத்து நடைபெறவுள்ளது.



***அருட்தந்தை ஜிம்மி தெக்கேகடுமத்தில்***
***இயக்குநர்***

| BIRTHDAY OF REV. FATHERS- APRIL - 2023 | |
|---|---|
| Fr. Antony Madapurackal | 01 |
| Fr. Abin Poovathummoottil | 01 |
| Fr. Vinu D Joseph | 02 |
| Fr. Jimmy Thekkekadumathil | 04 |
| Fr. Ajeesh Attiyil | 08 |
| Fr. Josy Puthenpurackal | 10 |
| Fr. Justin Sutheesh | 11 |
| Fr. Arun Chechottu CMI | 11 |
| Mar George Rajendran SDB | 14 |
| Fr. Dency Mundunadackal | 14 |
| Fr. Thomas Thekkethala CMI | 15 |
| Fr. Sebastian Pothenparampil MST | 19 |
| Fr. Charles Mundakathil CMI | 20 |
| Fr. Jacob Aiyammathra | 22 |

VINCENT-DE-PAUL
வின்செந்தியர்

# வின்சென்ட்- தே-பவுல் சபை

மஞ்சாலுமூடு வடடார சபை சார்பாக 12.03.2023 அன்று வின்சென்திய உறுப்பினர்கள் சேர்ந்து தடிக்காரன்கோணம் ராணி மரியா காப்பகத்தைச் சந்தித்தனர். மாலைக்கோடு திருச்சிலுவை பங்கின் ஆன்மீக ஆலோசகர் அருட்தந்தை ஜோஸ் வயலீல் அவர்கள் தலைமையில் இது நடைபெற்றது. இதில் 24 உறுப்பினர்கள் கலந்து கொண்டார்கள். காப்பகத்தில் தங்கியிக்கும் மனநலம் பாதிக்கப்பட்டவர்களுக்கு சிற்றுண்டி வின்சென்டியர்களால் வழங்கப்பட்டது. பின்னர் ரூ 5000 நன்கொடையாக கொடுக்கப்பட்டது. சந்திப்பு நிகழ்வை வட்டார சபை தலைவர் சகோ. ஜார்ஜ் வின்சென்ட் ஒருங்கிணைத்து வழிநடத்தினார்கள்.



***தென்காசி வட்டாரச் சபை***

தென்காசி வட்டாரச் சபையின் புதிய தலைவர் சகோ. ஷிஜு ராஜா அவர்களின் பணிப் பொறுப்பேர்ப்பு தென்காசி திருத்தொண்டு ஒருங்கிணைப்பாளர் அருள்தந்தை தோமஸ் தக்கலை அவர்கள் தலைமையில் ஆன்மீக ஆலோசகர் அருள்தந்தை இராஜேஷ் அவர்கள் முன்னிலையில் 19.03.2023 ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. மத்தியசபை தலைவர் சகோ. றாபி பணிஏற்பு செய்து வைத்தார். இந்நிகழ்வில் மத்திய சபை திட்ட அலுவலர் சகோ எட்வின்சன் மற்றும் விரிவாக்க அலுவலர் சகோ. கிறிஸ்துதாஸ் ஆகியோர் பங்கேற்றனர்.

***சகோ. D.Pஷாஜி,***
***தகவல் தொடர்பு அலுவலர்***

# அருட்சகோதரர்களிடமிருந்து

மார்ச் மாதம் அனைத்து அருட்சகோதரர்களும் இறுதித் தேர்வு எழுதினர். மார்ச் 15 மற்றும் மார்ச் 31 ஆகிய நாட்களில் அனைத்து அருட்சகோதரர்களும் விடுமுறைக்காக தங்கள் வீடுகளுக்கு சென்றார்கள். அவர்கள் மார்ச் 31 இல் நமது மறை மாவட்டத்தில் புனித வார நிகழ்வுகளில் கலந்துகொள்ள வந்தனர். உரோமையில் பயிலும் அருட்சகோதரர்கள் தங்கள் கல்வியை சிறப்புடன் தொடர்கின்றனர். இறையியல் படிக்கும் சகோதரர்கள் தங்கள் குருத்துவ ஆயத்த அருட்பொழிவுக்காக (minor order) தங்களை தயாரித்துக் கொண்டிருக்கிறார்கள்.

எங்களோடு பயிற்சி பெற்ற திருத்தொண்டார்கள் அஜின், பிரின்ஸ், மற்றும் ஜார்ஜ்குட்டி ஆகியோர் ஏப்ரல் மாதம் குருவானவர்களாக அருட்பொழிவு பெற தங்களையே தயாரித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு எங்கள் மனமார்ந்த வாழ்த்துக்கள். உங்கள் ஜெபத்தில் எங்களை நினையுங்கள். அனைவருக்கும் உயிப்பு திருநாள் வாழ்த்துகள்.

*சகோ. சுனில் ஆன்டணி*

| FEASTDAYS OF REV. FATHERS - APRIL 2023 | |
|---|---|
| Mar George Rajendran SDB | 24 |
| Fr. Arun Chechottu CMI | 24 |
| Fr. Charles Mundakathil CMI | 24 |
| Fr. Geo Choozhikunnel | 24 |
| Fr. Jins Pulingappallil MCBS | 24 |
| Fr. Jipson Chully MCBS | 24 |
| Fr. Rony Peedikakal MCBS | 24 |
| Fr.sinoy Panackachalil MCBS | 24 |
| Fr. Sumesh Palliyamthadathil | 24 |

# மறைமாவட்ட புலம் பெயர்ந்தோர் பணிக்குழு

புலம் பெயர்ந்தோருக்கான ஒருங்கிணைப்பு குழு கூட்டம் 2023 மார்ச் 14 ஆம் தேதி இயக்குனர் அருட்தந்தை சுமேஷ் அவர்கள் தலைமையில் ஜெபத்துடன் தொடங்கி நடைபெற்றது. அன்றைய கூட்டத்தில் மார்ச் 19 ஆம் தேதி புனித சூசையப்பர் திருவிழாவை சிறப்பாக கொண்டாட வேண்டும் என்றும் மாறுவேடப் போட்டி நடத்தி பரிசு வழங்க வேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது. மார்ச் 31 ஆம் தேதி சிலுவைப்பாதை ஜெப வழிபாடும் நடத்த தீர்மானிக்கப்பட்டது. மார்ச் 19ஆம் தேதி குழுவின் சார்பில் மாறுவேட போட்டி நடைபெற்றது. அதில் வயது வித்தியாசம் இன்றி பல்வேறு நபர்கள் பங்கெடுத்தனர். புனித சூசையப்பரின் வேடம் அணிந்து புகைப்படம் மற்றும் இரண்டு நிமிட வீடியோ எடுத்து அனுப்பி வைத்திருந்தனர். பரிசுகுரியவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். அவர்களுக்கு மே மாதக் கூட்டத்தில் பரிசுகள் வழங்கப்படும்.

### *இணையவழி சிலுவைப்பாதை*

மார்ச் 31ஆம் தேதி இரவு 8 மணி முதல் 9 மணி வரை நேரலை சிலுவைப்பாதை ஜெப வழிபாடு நடைபெற்றது. இதனை இயக்குனர் அருள்தந்தை சுமேஷ் அவர்கள் வழி நடத்தினார்கள். துபாய், சிங்கப்பூர், மாலத்தீவு போன்ற நாடுகளில் இருந்தும் பெங்களூரு, பாண்டிச்சேரி, சென்னை, மதுரை போன்ற ஊர்களில் இருந்தும் சுமார் 30 க்கும் மேற்பட்ட புலம்பெயர்ந்து வாழும் மறைமாவட்ட மக்கள் குடும்பமாக இச்செப வழிபாட்டில் கலந்து கொண்டனர். இரண்டாவது வருடமாக நடைபெற்ற இந்த ஜெப வழிபாடு அனைவருக்கும் ஒரு புது அனுபவத்தைக் கொடுத்தது.



ஒருங்கிணைப்பாளர் திரு எட்வின்சன் நிகழ்வின் இறுதியில் நன்றி கூறினார். பின்னர் உறுப்பினர்களின் பகிர்தல் நிகழ்வும் நடைபெற்று இயக்குனர் தந்தையின் ஆசியோடு நிகழ்ச்சிகள் அனைத்தும் இனிதே நிறைவு பெற்றது. இதற்காக உழைத்த ஒருங்கிணைப்பு குழு உறுப்பினர்கள் மற்றும் ஒத்துழைத்த குழு உறுப்பினர்கள் அனைவருக்கும் மறைமாவட்டம் சார்பில் நன்றிகள்.

அருட்தந்தை சுமேஷ்

புலம்பெயர்ந்தோர் பணிக்குழு இயக்குநர்

# தக்கலை மறைமாவட்ட நலவாழ்வு பணிக்குழு

நலவாழ்வு பணிக்குழுவின் சார்பாக 21.03.2023 அன்று நோயாளிகளை கவனிக்கும் நபர்களுக்கான கருத்தரங்கு கல்லுவிளை, கன்னியாகுமரி சமுக சேவை மையத்தில் நடைபெற்றது. ஜார்கண்ட் மாநிலம், ராஞ்சி மறைமாவட்ட நலவாழ்வு பணிக்குழு செயலர் அருட்சகோதரி நிர்மலா அவர்கள் கலந்துகொண்டு கருத்துரை வழங்கினார்கள். நோயாளிகளை கவனிப்பவர்கள் தங்களது ஆரோக்கியத்தை எவ்வாறு பேணிக்காப்பது, மனபலத்தை வளர்ப்பதற்கான வழிமுறைகள், முதலுதவி முன்னேற்பாடுகள், போன்றவற்றை பற்றியும் புற்று நோயால் பாதிக்கப்பட்டவர்களின் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிப்பதற்கான அரித்திமேசியா என்னும் தாவரத்தை குறித்தும் அதிலிருந்து உருவாக்கிய மருந்தை குறித்தும் கருத்துக்களை பகிர்ந்து கொண்டார்கள். கலந்துகொண்டவர்களின் சந்தேகங்களுக்கும் விளக்கம் அளித்தார். 65 பேர் பங்கேற்று பயன்பெற்றார்கள். நிகழ்ச்சியை நலவாழ்வு பணிக்குழு இயக்குநர் அருட்பணியாளர் மகேஷ் அவர்கள் ஒருங்கிணைத்தார்கள். இதில் மறைமாவட்ட நலவாழ்வு பணிக்குழு உறுப்பினர்கள் அருட்சகோ.சஜிதா, அருட்சகோ.தேஜஸ்வி, ஆகியோரும் கலந்துகொண்டனர். திரு. அஜின் திரு. இராஜசேகரன் ஆகியோர் நிகழ்வை முன்னின்று நடத்தினர்.



***அருட்சகோதரி டயானா SDS***
***செயலர்***

# தக்கலை இளையோர் கல்வி பணியகம்
## Thuckalay Youth Educational Services
in Collaboration with Trichy Don Bosco Vazhikatti

***தன்னார்வலர்களுக்கான பயிற்சி வகுப்புகள்***

தக்கலை மறைமாவட்ட சீரோ மலபார் இளையோர் இயக்கத்தின் மறைவட்ட மற்றும் அலகு பொறுப்பாளர்களுக்கான வாழ்க்கை வழிகாட்டிப்பயிற்சி 2023 மார்ச் 14 செவ்வாய்க்கிழமைகாலை காலை 10.00 மணியளவில் கல்லுவிளை SMYM அலுவலகத்தில் நடைபெற்றது. மறைமாவட்ட SMYM துணைத்தலைவர் அஞ்சனா வரவேற்று பேசினார். வாழ்க்கை வழிகாட்டி பற்றிய பயிற்சி வகுப்புகளை நடத்த திருச்சி டான் போஸ்கோ வழிகாட்டி ஒருங்கிணைப்பாளர் திரு ராஜா அவர்கள் வழிநடத்தினார். பயிற்சியில், வகுப்பு நடத்தும் நபர் எப்படி மாணவர்கள் முன் பேச வேண்டும் என்பதை குறித்து விளக்கினார் பின்பு எந்த அளவுக்கு மாணவர்களுக்கு வழி காட்ட வேண்டும் என்பதையும் மாணவர்களின் இயல்பை புரிந்து அவர்களின் இயல்புக்கேற்றவாறு எப்படிப்பட்ட வேலைவாய்ப்புகள் உள்ள படிப்புகளை வழங்க வேண்டும் என்பதை பற்றியும் கூறினார். பின்பு ஒவ்வொரு துறைகளிலும் உள்ள படிப்புகளை பற்றியும் அந்தத் துறைகளில் எவ்வாறு படித்தால் வேலை கிடைக்கும் என்பதைப் பற்றியும் அதைப் படிப்பதற்குத் தகுந்த கல்லூரிகளைத் தேர்ந்தெடுப்பது பற்றியும் சிறந்த முறையில் விளக்கிக் கூறினார். மதிய உணவிற்கு பின் தக்கலை மறை மாவட்ட இளையோர் இயக்க இயக்குனர் அருட்தந்தை ஜோசப் சந்தோஷ் அவர்கள் தன்னார்வலர்களுக்காக இளையோர் மறைக்கல்வி வகுப்பு நடத்தினார். இறுதியில் தக்கலை மறைமாவட்ட SMYM செயலர் மெரின் சுஜித் அனைவருக்கும் நன்றி கூறினார். இதில் மொத்தம் 10 பேர் கலந்து கொண்டனர். பயிற்சி வகுப்பானது சுமார் 4 மணியளவில் நிறைவு பெற்றது.



***சஜின்,***
***ஒருங்கிணைப்பாளர்***

# மறைமாவட்டச் செய்திகள்

## திருப்பலி நூல் மொழிபெயர்ப்பு

மறைமாவட்ட ஆயர் தலைமையில் நடைபெற்ற திருத்தப்பட்ட திருப்பலியின் புதிய மொழிபெயர்ப்பு 2023 மார்ச் 09 அன்று முடிவடைந்தது. உயர் பேராயரின் அனுமதிக்கு பிறகு பெந்தேகோஸ்து திருநாளுக்கு புதிய திருப்பலி நூல் வெளிவர உள்ளது. இதற்காக உழைத்த அனைத்து அருட்தந்தையர்களுக்கும் பொதுநிலையினருக்கும் மறைமாவட்டம் சார்பாக நன்றியை தெரிவித்து கொள்கிறோம்.

## CRI உறுப்பினர்களுக்கான ஒருநாள் தியானம்

தக்கலை மறைமாவட்டத்தில் செயல்படும் CRI உறுப்பினர்களுக்கான ஒருநாள் தியானம் தக்கலை சங்கமத்தில் வைத்து 2023 மார்ச் 11 சனிக்கிழமை நடைபெற்றது. அருட்தந்தை றோபின்ஸ் குழிகோடில் அவர்கள் திருப்பலி நிறைவேற்றி ஆராதனை வழிநடத்தினார்.

## மறைவட்ட முதன்மை பணியாளர்களுக்கான இணையவழி கூட்டம்

தக்கலை மறைமாவட்டத்தின் மறைவட்ட முதன்மை பணியாளர்களுக்காக இணையவழி கூட்டம் 2023 மார்ச் 13 திங்கள்கிழமை இரவு 8.30 மணியளவில் Google Meet இணையதளம் வாயிலாக நடைபெற்றது. மறைமாவட்ட ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் SDB, குருகுல முதல்வர் பேரருட்தந்தை தோமஸ் பவ்வத்துப்பறம்பில் மற்றும் மறைவட்ட அருட்தந்தையர்கள் கலந்து கொண்டனர்.

## அருட்தந்தையர் இல்ல மந்திரிப்பு – கோழிப்போர்விளை

கோழிப்போர்விளையில் இயங்கி வரும் சிக்கார் பண்ணையில் அருட்தந்தையர் தங்குவதற்கான புதிய இல்லம் கட்டப்பட்டு அதன் மந்திரிப்பு 2023 மார்ச் 15 அன்று தக்கலை மறைமாவட்ட ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் SDB அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அருட்தந்தை ஜியோ சூழிக்குந்நேல் இதற்கான முயற்சிகளை சிறப்பாக செய்திருந்தார்.

## அடிக்கல் நாட்டுவிழா – மார்த்தாண்டம்

மார்த்தாண்டம் திருத்தொண்டு நிலைய பகுதியில் அருட்தந்தையர் தங்குவதற்கான இல்லம் மற்றும் பல்நோக்கு அரங்கிற்கான அடிக்கல் நாட்டுவிழா 2023 மார்ச் 15 அன்று மறைமாவட்ட ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் SDB அவர்கள் தலைமையில் நடைபெற்றது. ஆலய பங்குதந்தை பேரருட்தந்தை தோமஸ் சத்தியநேசன் அவர்கள் இதனை ஒருங்கிணைத்திருந்தார்.

### திருத்தொண்டு இல்லம் அடிக்கல் நாட்டுவிழா – இராமேஸ்வரம்

தக்கலை மறைமாவட்ட எல்லையான இராமேஸ்வரம் மற்றும் சிவகங்கை மாவட்டங்களில் மறைபரப்பு பணி பாலா மறைமாவட்டத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.அதன்விளைவாக பாலா மறைமாவட்டத்திலிருந்து இராமேஸ்வரம் மற்றும் சிவகங்கை மாவட்டங்களில் மறைபரப்பு பணிகள் நடைபெற்று வருகிறது. அதன் ஒருபகுதியாக 2023 மார்ச் 17 அன்று ராமேஸ்வரம் மாவட்டத்தில் திருத்தொண்டு பணிகளுக்காக புனித சூசையப்பர் இல்லத்தின் அடிக்கல் நாட்டுவிழா பாலா மறைமாவட்ட ஆயர் மார் ஜோசப் கல்லறங்காட் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. தக்கலை மறைமாவட்ட ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் SDB அவர்கள் முன்னிலை வகித்தார். தக்கலை மறைமாவட்டத்திலிருந்து அருட்தந்தையர்கள் பலர் கலந்து கொண்டனர். அருட்தந்தை மேத்யூ குழிஞ்ஞாலில் மற்றும் அருட்தந்தை கிறிஸ்துதாஸ் அவர்கள் இதற்கான ஏற்பாடுகளை சிறப்பாக செய்திருந்தனர்.

### குருக்களுக்கான கூட்டம், சூசைபுரம் & தக்கலை பிலாங்காலை மறைவட்டம்

சூசைபுரம் & தக்கலை - பிலாங்காலை மறைவட்டத்தைச் சார்ந்த குருக்களுக்கான கூட்டம் 2023 மார்ச் 20 திங்கட்கிழமை காலை 10 மணியளவில் மாங்கரை புனித வியாகப்பர் ஆலயத்தில் நடைபெற்றது. அருட்தந்தை ஜெஸ்டின் செறுவேலில் திருத்தப்பட்ட யாம செபங்களை குறித்து விளக்கி கூறினார். குருகுல முதல்வர் பேரருட்தந்தை தோமஸ் பவத்துப்பறம்பில் மற்றும் மறைவட்டத்தைச் சார்ந்த அனைத்து அருட்தந்தையர்கள் கலந்து கொண்டனர்.

### முன்னால் பேராயர் மார் ஜோசப் பவ்வத்தில் மறைவு

சங்னாச்சேரி மறைமாநில முன்னால் பேராயர் மார் ஜோசப் பவ்வத்தில் 2023 மார்ச் 18 அன்று காலமானார். அன்னாரது நல்லடக்கம் மார்ச் 22 புதன்கிழமை நடைபெற்றது. மறைமாவட்ட ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் SDB, மறைமாவட்ட அருட்தந்தையர்கள் என ஏராளமானோர் இதில் கலந்து கொண்டனர்.

### அருட்சகோதரியர் இல்ல மந்திரிப்பு – கயத்தாறு

கயத்தாறு பகுதியில் தக்கலை FCC சகோதரிகள் திருத்தொண்டுப் பணிகள் செய்து வருகின்றனர். அதன் ஒருப்பகுதியாக புதிதாக கட்டப்பட்ட கான்வென்ட் 2023 மார்ச் 23 அன்று மறைமாவட்ட ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் SDB, அவர்களால் மந்திரிக்கப்பட்டது. தக்கலை FCC மகாணத்தலைவி அருட்சகோதரி சீலியா FCC திறந்து வைத்தார். மறைமாவட்ட அருட்தந்தையர்கள் பலர் கலந்து கொண்டனர்.

### ▶ சமூகக் கூடம் அடிக்கல் நாட்டுவிழா – குலசேகரம்.

**குலசேகரம் மறைபரப்பு பணிகளின் ஒருபகுதியாக சமூகக் கூடம் கட்டப்படவுள்ளது. இதன் அடிக்கல் நாட்டுவிழா 2023 மார்ச் 27 அன்று மறைமாவட்ட குருகுல முதல்வர் பேரருட்தந்தை தோமஸ் பவ்வத்துப்பறம்பில் மற்றும் மறைமாவட்ட ஆவணக்காப்பாளர் அருட்தந்தை ஜோஷி குளத்துங்கல் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. குலசேகரம் பங்குதந்தை அருட்தந்தை ஜோஸ் கானாச்சிகுழியில் இதற்கான முயற்ச்சிகளை சிறப்பாக செய்திருந்தார்.**

### ▶ குருமாணவர்களுக்கான கூட்டம்

**குருமடங்களில் பயிலும் அருட்சகோதர்களுக்கான கூட்டம் 2023 மார்ச் 31 அன்று தக்கலை சங்கமத்தில் அருட்தந்தை ஜோஷி குளத்துங்கல் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இதில் நடைபெறவுள்ள VPV, புனித வார நிகழ்வுகள், தமிழ் மொழி பயிற்சி, புளியறை பணி முகாம் குறித்து விவாதிக்கப்பட்டது.**

## இதரச் செய்திகள்

- சீனிவிளையைச் சேர்ந்த அருட்சகோதரி திரேஸ்மரியா ASMI அவர்களின் தாயார் திருமதி லீலா. (68) 2023 மார்ச் 05 அன்று நித்திய ஓய்வுக்கு அழைக்கப்பட்டார். அருட்சகோதரியின் குடும்பத்திற்கு மறைமாவட்டம் சார்பில் ஆழ்ந்த இரங்கலையும் பிரார்த்தனைகளையும் தெரிவித்துக் கொள்கிறோம்
- அருட்சகோதரி பிளவர்லெட் ASMI அவர்களின் மூத்த சகோதரி திருமதி. மேரி (64) 2023 மார்ச் 11 அன்று நித்திய ஓய்வுக்கு அழைக்கப்பட்டார். அருட்சகோதரியின் குடும்பத்திற்கு மறைமாவட்டத்தின் ஆழ்ந்த இரங்கலையும் பிரார்த்தனைகளையும் தெரிவித்துக் கொள்கிறோம்.
- கடந்த 6 மாதங்களாக தக்கலை சங்கமத்தில் திருத்தொண்டு பணிசெய்த அருட்சகோதர் விபின் தனது இறைபணிக்குபின் சொந்த மறைமாவட்டத்திற்கு திரும்பியுள்ளார்.
- காதுகேளாதோருக்காகப் பணிபுரியும் டொமினிக்கன் சபையை சார்ந்த அருட்சகோதர் ஜோசப்குட்டி திருத்தொண்டு பணிக்காக நமது மறைமாவட்டற்கு வருகை தந்துள்ளார். மேய் மாதம் இறுதி வரை அவர் காரோடு பங்கில் திருத்தொண்டு பணியாற்றுவார்.
- ASMI சபையின் மதர் ஜெனரல் அருட்சகோதரி மெர்சி மரியா ASMI 2023 மார்ச் 28 அன்று மறைமாவட்டத்திற்கு வருகை தந்து ஆயரோடு சந்திப்பு நடத்தினார்.

# தென்காசி மறைத்தள செய்திகள்

தென்காசி மறைத்தளத்தில் பணியாற்றுகின்ற அருட்தந்தையர்கள் மற்றும் அருட்கன்னியர்களின் கூட்டம் மார்ச் 18 ஆம் தேதி அன்பு இல்லத்தில் நடத்தப்பட்டது. ஆயர் அவர்கள் தலைமை தாங்கினார். மறைமாவட்ட ஆவண காப்பாளர் பேரருட்தந்தை ஜோஷி குளத்துங்கல் மற்றும் அருட்தந்தை ஜஸ்டின் ஆகியோரும் வருகை தந்து யாம ஜெப புதிய திருத்தங்களை பற்றி வகுப்புகள் நடத்தினார்.

---

# வரவிருக்கும் நிகழ்வுகள்

குருக்களுக்கான கூட்டம், அண்ணிக்கரை - ஏப்ரல் 01
(நித்திரவிளை, படந்தாலுமூடு மறைவட்டம்)
ஓசன்னா ஞாயிறு – ஏப்ரல் 02
குருத்துவ ஆயத்த அருட்பொழிவுகள், சங்கமம் – ஏப்ரல் 03
குருக்களுக்கான கூட்டம், களியல் - ஏப்ரல் 03
(களியல், மஞ்சாலுமூடு, ஆறுகாணி மறைவட்டம்)
திருத்தொண்டர் அருட்பொழிவு, கழுவன்திட்டை – ஏப்ரல் 04
அருட்தந்தையர் தியானம், சங்கமம் – ஏப்ரல் 05
பாஸ்கா வியாழன் – ஏப்ரல் 06
புனித வெள்ளி – ஏப்ரல் 07
புனித சனி – ஏப்ரல் 08
உயிர்ப்பு ஞாயிறு – ஏப்ரல் 09
Dn ஜார்ஜ் குட்டி குருத்துவ அருட்பொழிவு, பாலா – ஏப்ரல் 12
Dn பிரின்ஸ் குருத்துவ அருட்பொழிவு, இடுக்கி – ஏப்ரல் 13
நம்பிக்கை ஆலயம் வெள்ளிவிழா நிறைவு – ஏப்ரல் 14
Dn அஜின் குருத்துவ அருட்பொழிவு, நித்திரவிளை– ஏப்ரல் 15
இறையழைத்தல் வாரம் தொடக்கம் – ஏப்ரல் 16
அருட்சகோதர் பணி முகாம், புளியறை – ஏப்ரல் 16 - 23
இறையழைத்தல் வாரம் நிறைவு – ஏப்ரல் 30
VPV துவக்கம் – ஏப்ரல் 30

# மறைவட்டச் செய்திகள்

## படந்தாலுமூடு

### திரு இருதய மறைவட்ட ஆலயம் படந்தாலுமூடு

தவக்காலத்தை முன்னிட்டு எல்லா வெள்ளிக்கிழமைகளும் காலை 10 மணி முதல் மதியம் 12 மணி வரை நற்கருணை ஆராதனையும் மாலை 6 மணிக்கு திருப்பலியும் நடைபெற்றது.

மார்ச் 12 அன்று 14 ஆலயங்களுக்கு சிலுவைப்பாதை திருப்பயணம் நடைபெற்றது.

மார்ச் 19 பங்குத்தந்தை தோமஸ் சத்தியநேசன் அவர்கள் தலைமையில் புனித சூசையப்பர் உறவிய ஆண்டுவிழா சிறப்பாக கொண்டாடப்பட்டது அருட்தந்தை டென்சி முன்டுநடக்கல் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார்.

### புனித சூசையப்பர் ஆலயம் வள்ன்நகர்

மார்ச் 1 முதல் பெண்களின் ஆடைகளில் செய்யப்படுகின்ற ஆரி வேலைக்கான பயிற்சி அருட்தந்தை மகேஷ் அவர்கள் தலைமையில் தொடங்கப்பட்டது. இதில் 22 பெண்கள் கலந்துகொண்டு பயிற்சி பெறுகின்றனர்.



மார்ச் 8 இல் மகளிர் தின கொண்டாட்டம் அருட்தந்தை மகேஷ் தலைமையில் கேக் வெட்டிக் கொண்டாடப்பட்டது.

மார்ச் 23 அன்று 14 திருத்தலங்களுக்கு திருப்பயணம் நடைபெற்றது.

### புனித மத்தேயு ஆலயம் அன்னிக்கரை

தவக்காலத்தை முன்னிட்டு எல்லா நாட்களிலும் மாலை 5.00 மணிக்கு சிலுவைப் பாதையும் அதைத் தொடர்ந்து திருப்பலியும் நடைபெற்று வருகிறது. மார்ச் 03 முதல் வெள்ளி நற்கருணை ஆராதனையும், ஒப்புரவுவழிபாடும் நடைபெறுகிறது.

மார்ச் 17 வெள்ளிக்கிழமை 14 ஆலயங்களுக்கு சிலுவைப்பாதை திருப்பயணம் நடைபெற்றது.

மார்ச் 19 புனித சூசையப்பர் திருவிழா சிறப்பாக கொண்டாடப்பட்டது.

மார்ச் 23 வியாழக்கிழமை தவக்கால தியானம் நடைபெற்றது.

## மஞ்சாலுமூடு

### திரு குடும்ப ஆலயம் முக்கூட்டுகல்



*19.3.2023* புனித சூசைப்பரின் திருநாள் தந்தையர் தினமாக கொண்டாடப்பட்டது. தந்தையர்களை கவுரவிக்கும் விதமாக அவர்களுக்காக ஆடம்பர கூட்டு திருப்பலியும், சிறப்பு ஜெபங்களும் ஒப்புக்கொடுக்கப்பட்டன. அன்று கேக் வெட்டப்பட்டு அனைவருக்கும் இனிப்புகள் வழங்கப்பட்டன.

### புனித தோமையார் ஆலயம் – முழுக்கோடு

புனித தோமையார் ஆலயம் முழுக்கோட்டில் *10, 11, 12* வகுப்புகளில் பயிலும் மாணவ, மாணவிகளுக்கான ஆண்டு இறுதித் தேர்வு நடைபெற இருந்ததால் அவர்களுக்காக சிறப்பு ஆராதனை *12.3.2023* அன்று நடைபெற்றது. இவ் ஆராதனையை பங்கு தந்தை ஆன்றோ அவர்கள் வழி நடத்தினார்கள். இந்த ஆராதனையில் பிள்ளைகள் பெற்றோரிடம் சேர்ந்து நின்று ஜெபித்தார்கள். பின்னர் அருள்தந்தை அவர்கள் அனைவர் நெற்றியிலும் தைலம் பூசி ஆசிர்வதித்தார்கள்.

*19.3.2023* அன்று புனித சூசையப்பரின் திருநாள் கொண்டாட்டமும், தவக்கால தியானமும் நடைபெற்றது.

## தக்கலை – பிலாங்காலை

### புனித குழந்தை தெரசாள் மறைவட்ட ஆலயம் பிலாங்காலை

மார்ச் மாதம் புனித சூசையப்பர் திருநாள் *3* நாட்கள் சிறப்பாக கொண்டாடப்பட்டது. திருப்பலி நவநாள் நடைபெற்றது. நேர்ச்சை உணவு வழங்கப்பட்டது. மாதம் தோறும் *2* வது சனிக்கிழமை நோயாளிகளுக்கான சிறப்பு ஜெபம் மற்றும் திருப்பலி நடைபெற்று வருகிறது. ஆலயத்தில் இருந்து *14* ஆலயங்களுக்கு திருப்பயணம் செல்லப்பட்டது. அனைத்து நிகழ்வுகளையும் பங்குதந்தை முன்னின்று நடத்தினார்.

### புனித சவேரியார் ஆலயம் கைசாலவிளை

புனித சூசையப்பர் திருவிழா சிறப்பாக கொண்டாடப்பட்டது. அன்றைய தினம் இரண்டு அருட்தந்தையர்களின் பெயர் கொண்ட திருவிழா கொண்டாடப்பட்டது.

## களியல்

### புனித சூசையப்பர் ஆலயம் – காரோடு

காரோடு புனித சூசையப்பர் தேவாலயத்தில் ஆலய பாதுகாவலர் திருவிழா மார்ச் 19 ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. காலை 8.45 மணியளவில் மறைக்கல்வி மாணவர்களுக்கு மறைக்கல்வி வகுப்புகளும் தொடர்ந்து 9.30 மணி அளவில் சிலுவைப்பாதையும், சூசையப்பர் நவநாள் நிகழ்ச்சி நடைபெற்றது. அதைத்தொடர்ந்து ஆறுகாணிக் மறைவட்ட முதன்மைபணியாளர் அருட்தந்தை டோஜி பரம்பில்பரம்பில் அவர்கள் தலைமையில் ஆடம்பரக் கூட்டுத்திருப்பலி நடைபெற்றது. அருட்தந்தை ஜோபி லாஸ்லெட் அவர்கள் மறையுரை வழங்கினார்கள். திருப்பலிக்கு பின் மறைந்த முன்னாள் பேராயர் மார் ஜோசப் பவ்வத்தில் அவர்கள் நினைவு ஒப்பீஸ் நடைபெற்றது. தொடர்ந்து அருட்சகோதரி வளனரசி SDS அவர்களின் பெயர் கொண்ட திருவிழா நிகழ்வுகளும் நடைபெற்றது. இறுதியில் அனைவருக்கும் அன்பின் விருந்து வழங்கப்பட்டது. இந்நிகழ்வுகளை புனித சூசையப்பர் உறவிய மக்கள் சிறப்பாக செய்திருந்தனர்.



## சூசைபுரம்

### கிறிஸ்து அரசர் ஆலயம் – பாலப்பள்ளம்

11.3.2023 பாலப்பள்ளம் முதல் கன்னியாகுமரி வரை 14 ஆலயங்களுக்கு சிலுவை பாதை திருப்பயணம் நடைபெற்றது. இதில் சுமார் 60 பேர் பங்குகொண்டுனர்

12.3.2023 அனைத்து உறவியங்களின் கூடுகையும் ஆலயத்தில் வைத்து தனித்தனியாக நடத்தப்பட்டது. அக்கூடுகையில் உறவிய தலைவர்கள் தேர்தல் நடைபெற்றது.

13.03.23 அன்று பொதுத்தேர்வு எழுதும் மாணவ மாணவியருக்காக சிறப்பு திருப்பலி நடைபெற்றது. அத் திருப்பலியில் மாணவ மாணவியரின் எழுது பொருள்கள் மந்திரித்து வழங்கப்பட்டது. 19.03.23 இல் புனித சூசையப்பர் தினம் பங்கில் சிறப்பாக கொண்டாடப்பட்டது. அதோடு புதிய உறவிய பொறுப்பாளர்களுக்கு பணிப் பொறுப்பேற்பு நிகழ்வும் நடைபெற்றது.

25.03.23 இல் புதிய உறவியத் தலைவர்களின் முதல் கூடுகை

நடைபெற்றது. அன்றைய தினம் இளையோர் இயக்கம் சார்பில் TAIZE Prayer பங்கில் நடைபெற்றது. 26.03.2023 இல் பங்கில் புதிய கைகாரர்களுக்கான தேர்வு நடந்தது.

31.3.23 இல் பங்கில் செயல்படும் கிறிஸ்து அரசர் மழலையர் பள்ளியின் ஆண்டு விழா பங்குத்தந்தை அருள்தந்தை ஜான்பால் அவர்கள் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது. தவக்காலத்தை சிறப்பிக்கும் வண்ணம் எல்லா வெள்ளிக்கிழமைகளிலும் சிலுவை பாதையும் திங்கள் புதன் மற்றும் சனி ஆகிய நாட்களில் கெபியில் அன்னையர் இயக்கம், மரியாயின் சேனை மற்றும் வின்சென்தியர் தலைமையில் ஜெபமாலை நடைபெற்று வருகிறது.

- **தூய பாத்திமா அன்னை ஆலயம் – பாத்திமாபுரம்.**

தூய பாத்திமா அன்னை ஆலயத்தில் இருந்து 14.03.2023 செவ்வாய்கிழமை 14 திருத்தலங்களுக்கு சென்று சிலுவை பாதை திருப்பயணம் நடைபெற்றது.

- **தேவமாதா ஆலயம் – கிள்ளியூர்**

மார்ச் மாதம் 05 ம் தேதி ஞாயிற்றுக்கிழமை ஆயர் அவர்கள் வருகை தந்து கல்லறை தோட்டத்தை பற்றியும் அது அமைப்பதன் முக்கியத்துவத்தை பற்றியும் தெளிவாக விளக்கிக் கூறினார்.

மார்ச் 12 ஞாயிற்றுக்கிழமை திருப்பலிக்கு பின் அருட்தந்தை சாஜன் நெட்டபொங்கு தலைமையில் பங்குப்பேரவை கூட்டம் நடைபெற்றது

மார்ச் 19 புனித சூசையப்பர் திருவிழாவை முன்னிட்டு அருட்தந்தை சாஜன் அவர்களின் பெயர் பெயர் கொண்ட விழா இறைமக்கள் சார்பாக கேக் வெட்டி கொண்டாடப்பட்டது.

மார்ச் 25 சனிக்கிழமை பங்குதந்தை மற்றும் அருள் சகோதரிகள் தலைமையில் புனித பயணம் மேற்கொள்ளப்பட்டது.



## நித்திரவிளை

- **புனித ஜார்ஜியார் ஆலயம் – முஞ்சிறை**

தவக்காலத்தை முன்னிட்டு எல்லா நாட்களிலும் மாலை 6:30 மணிக்கு ஆலயத்தில் சிலுவைப்பாதை நடைபெற்று வருகிறது. மார்ச் மாதம் 11 ஆம் தேதி முதல் ஒவ்வொரு உறவியமாக வீடுகளிலும் சிலுவைப்பாதை நடைபெற்று வருகிறது. எல்லா வெள்ளிக்கிழமைகளும் ஆடம்பர சிலுவை பாதை, திருப்பலி மற்றும் ஆடம்பர நற்கருணை பவனி நடைபெற்று வருகிறது. மார்ச் 19ஆம் தேதி புனித சூசையப்பர் திருநாள் சிறப்பு திருப்பலி கொண்டாடப்பட்டது.

- **புனித அந்தோணியார் ஆலயம் – வயலங்கரை**

தவக்காலத்தை முன்னிட்டு எல்லா நாட்களிலும் மாலை 6:30 மணிக்கு திருப்பலி நடைபெற்று வருகிறது எல்லா வியாழக்கிழமைகளிலும் மாலை திருப்பலியை தொடர்ந்து திவ்ய நற்கருணை ஆராதனை நடைபெற்று வருகிறது. வெள்ளிக்கிழமையில் ஆடம்பர சிலுவை பாதை ஆலயத்தை சுற்றி நடைபெறுகிறது மார்ச் மாதம் 7 தேதி எட்டாமடைக்கு சிலுவைபாதை பயணம் நடைபெற்றது. 17 மற்றும் 18 தேதிகளில் மலையாற்றூர் திருபயணம் மேற்கொள்ளப்பட்டது. இதில் அருவித்துறை, மலையாற்றூர், எடத்துவா, பரணிங்ஙானம் அர்புங்கல், தங்கிபள்ளி, வல்லார்படம் பள்ளி ஆகிய இடங்களுக்கு திருப்பயணம் மேற்கொள்ளப்பட்டது.



மார்ச் 26 ஆம் தேதி மாலை 4.30 மணிக்கு திருப்பலியும் அதைத்தொடர்ந்து ஒப்புரவு வழிபாடும் நடைபெற்றது.

**தகவல் சேகரிப்பு : திருமதி சினேக லதா | திருமதி ஹேமா | திருமதி செலின் மேரி | திருமதி ஷீலா, திருமதி ஷைலா | மெரின் சுஜித்**

## MONTHLY AGENDA – APRIL 2023

| DATE | DAY | TIME | EVENTS |
|---|---|---|---|
| 1 | Sat | 09.30 am<br>10.00 am | FA: Marriage Preparation Course at Kalluvilai<br>SINAI: One day convention Thuckalay-Plankalai and Nithravilai Forane<br>SMYM: Central Committee Meeting at Kalluvilai |
| 2 | Sun | | PALM SUNDAY<br>KKSSS: Distribution of Revolving loan for the SHG Members |
| 3 | Mon | 06.30 pm | Vestition and Minor orders at Sangamam<br>Forane Priest Conference for Arukani, Kaliyal, Manjalumoodu |
| 4 | Tue | 04.00 pm | Diaconate Ordination at St. Martin de Porres Church, Kazhuvanthittai<br>SMYM: Manjalumoodu Forane Lent Spiritual Renewal Prog. at Malaicode<br>KKSSS: Educare Classes |
| 5 | Wed | 09.30am | Sangamam: Recollection for Priests and Religious |
| 6 | Thu | | Holy Thursday |
| 7 | Fri | | Good Friday |
| 8 | Sat | | Holy Saturday<br>Bishop's House: Curia Meeting |
| 9 | Mon | | Happy Easter |
| 12 | Wed | 09.30 am | Ordination of Dn. Georgekutty at St. George Church (Lalam) Palai |
| 13 | Thu | 09.30 am | Ordination of Dn. Prince at Infant Jesus Church, Thovarayar. (Kattappana) |

| | | | |
|---|---|---|---|
| 14 | Fri | 07.30 am<br><br>05.00 pm | Colachal: Care Your Heart Marathan by Health Commission<br>HAPPY BIRTHDAY OF MAR GEORGE RAJENDRAN SDB<br>Nambikaialayam Silver Jubilee Conclusion |
| 15 | Sat | 09.30 am | Ordination of Dn. Ajin at Jayamatha Forane Church, Nithravilai |
| 16 | Sun | 10.30am<br>06.00 pm | CAT: BTCT II at Padanthalumoodu<br>LC: Soosaipuram Forane Meeting<br>Nithravilai: Kurusadi Blessing |
| 22 | Sat | | SINAI: One day Convention at the Retreat center, Kalluvilai |
| 23 | Sun | 02.00 pm<br><br>01.30 pm | CAT: Scholarship Exam (X-XII) in Forane centers<br>MJ: Parish level Seminar<br>SMYM: Soosaipuram Forane Youth Meet |
| 26 | Wed | 02.00 pm | MIG: Chennai Sangamam |
| 29 | Sat | 09.30 am | CAT: VPV Training for teachers at Kalluvilai |
| 30 | Sun | 02.00 pm | CAT: VPV Begins<br>CAT: Scholarship Exam (III- IX) at Padanthalumoodu<br>LC: Padanthalumoodu Forane Meeting |

**Fr.Thomas Powathuparampil, Protosyncellus**

# BISHOP'S ENGAGEMENTS - APRIL 2023

| DATE | DAY | TIME | EVENTS |
|---|---|---|---|
| 1 | Sat | 03.00 am | Kalluvilai: Visit to Marriage Preparation Course candidates |
| 2 | Sun | 08.00 pm | Palm Sunday: Holy Qurbana at St. Maria Goretti Church, Athencode |
| 3 | Mon | 07.00 pm | Vestition and Minor Orders at Sangamam |
| 4 | Tue | 10.00 am<br>05.30 pm | Bishop's House: Meeting with College Admin Team<br>Kazhuvanthittai: Diaconate Ordination at St. Martin de Porres Church |
| 5 | Wed | 09.30 pm | Sangamam: Priest and Religious Recollection |
| 6 | Thu | 05.30 pm | Nagercovil: Holy Thursday: Holy Qurbana at St. Alphonsa Shrine Church |
| 7 | Fri | 08.00 am | Patthukani: Good Friday: St. Thomas Church |
| 8 | Sat | 10.00 am<br>11.30 pm | Great Saturday<br>Bishop's House: Curia Meeting<br>Kaisalvilai: Easter Vigil Holy Qurbana |
| 10 | Mon | 05.00 am | >> Changanassery<br>Personal Recollection |
| 11 | Tue | 10.00 am | Changanassery: Silver Jubilee Qurbana of Sacred Heart Sisters |
| 12 | Wed | 09.30 am | Palai: Ordination of Dn. Georgekutty at St. George Church (Lalam) |
| 13 | Thu | 09.30 am | Kattappana: Ordination of Dn. Prince at Infant Jesus Church, Thovarayar |

| | | | |
|---|---|---|---|
| 14 | Fri | 07.30 am<br>11.00 am<br>05.00 pm | Colachal: Care your Heart Marathan by Health Commission Thuckalay<br>Padanthalumoodu: Holy Qurbana at OMMI Convent<br>Kazhuvanthittai: Nambikaiyalayam Silver Jubilee conclusion |
| 15 | sat | 09.30 am | Ordination of Dn. Ajin at Jayamatha Forane Church, Nithravilai |
| 16 | Sun | 10.00 am<br>11.30 am<br>06.00 pm | Marthandam: Diocese Health care meeting and medical camp<br>Padanthalumoodu: School Staff gathering (farewell)<br>Nithravilai: Kurusady Blessing |
| 17 | Mon | 11.00 am | Kalamassery: Marriage Holy Qurbana |
| 18-28 | | | Kadmondu, Nepal for FABC Bishop's Meet |
| 29 | Sat | 12.30 am<br>06.00 pm | Kochi: Arrival from Kadmondu<br>Changanassery: Martyrdom of St. Thomas Jubilee Conclusion |
| 30 | Sun | 09.00 am<br>05.00 pm | Munchirai: Feast Day Holy Qurbana<br>Kunnuvilai: Feast Day Holy Qurbana |

**Rev. Fr. Robin Jose, Bishop's Secretary**



CATECHISM BASIC THEOLOGICAL COURSE, CERTIFICATE AWARDING, KALLUVILAI, 25.03.2023



SMYM, TAIZE PRAYER, VAYALANKARAI, 19.03.2023



KARUNAI ILLAM, ANNIVERSARY, NITHIRAVILAI, 29.03.2023



MAR JOSEPH POWATHIL FUNERAL,
CHANGANASSERY CATHEDRAL, 22.03.2023



ST. JOSEPH MISSION HOME, RAMESWARAM,
FOUNDATION STONE , 19.03.2023

For Private Circulation Only

IRAI ARUL, The Official Organ of the Diocese of Thuckalay

Published by: Fr. Joseph Santhosh for the Diocese of Thuckalay,
Bishop's House, Post Box No. 12, Thuckalay - 629175

Printed at: Pulari Offset Press, Thuckalay 629175, Ph. 04651-252570